இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 302 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 30 – சனிக்கிழமை 13 ஜீன் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 302 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 30 - Saturday 13 June 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## ஸ்ரீவைகுண்டத்தில் முதலமைச்சரின் ரசிகைக்கே கூட்டுப் பாலியல் வன்கொடுமை!

# த.வெ.க. எம்.எல்.ஏ.வை பதவி நீக்கம் செய்க!



சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசுவின் புதல்வி அ. அமிர்தா–கி.ஜித்தேன்குமார் ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளார் டி.ஆர்.பாலு எம்.பி. கழக முதன்மைச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. ஆகியோர் உள்ளனர்.

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஜீன் 13-

**“தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் ஆளுங்கட்சிப் பெண்ணுக்கே பாலியல் வன்கொடுமையினை ஆளுங் கட்சி நிர்வாகிகள் செய்துள்ளனர். இதில் குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்ட த.வெ.க. சட்டமன்ற உறுப்பினரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“உண்மையிலேயே பெண்கள் பாதுகாப்பில் முதலமைச்சருக்கு அக்கறை இருக்கிறதா?” என்று தமிழ்நாட்டுப் பெண்களை எல்லாம் கொதிப்படைய வைத்துள்ளது ஸ்ரீவைகுண்டத்தில் முதலமைச்சர் விஜயின் ரசிகை ஒருவருக்கு நடந்துள்ள அநீதி.

அந்தப் பெண்ணை ஸ்ரீவைகுண்டம் த.வெ.க எம்.எல்.ஏ. சரவணனுக்கு நெருக்கமான அக்கட்சி நிர்வாகிகள் இருவர், வேலை வாங்கித்தருவதாகக் கூறி காரில் அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

அமைச்சர் புஸ்ஸி ஆனந்திடம் பேசி உனக்கு வேலை வாங்கித் தருகிறேன் என்று எம்.எல்.ஏ .சரவணன் சமரசம் பேச முயன்றதாக பாதிக்கப்பட்டப் பெண் கூறியுள்ளார்.

இதேபோல், இன்னொரு பெண்ணும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பெண் கூறுகிறார்.

**மக்கள் கேட்கிறார்கள் யார் அந்த மேலிடம்?**

இன்னொரு அமைச்சருக்கும் இந்தப் பிரச்சினை தெரியும் என்கிறார். எல்லாம் மேலிடத்துக்குத் தெரியும் என்று குற்றவாளிகள் கூறியதாகவும் சொல்லி உள்ளார்.

ஆளுங்கட்சியில் “யார் அந்த மேலிடம்” என்று மக்கள் கேட்கின்றனர்.

‘தனிமனித ஒழுக்கம்’ பற்றி பாடமெடுத்துள்ள முதலமைச்சரின் ஒட்டுமொத்த #SofaModel அரசும், இந்த விவகாரத்தை மூடிமறைக்க முயன்றுள்ளது.

குற்றத்தை செய்தவர்களை பாதுகாக்க முயன்றதோடு மட்டும் இல்லாமல், பாதிக்கப்பட்ட பெண்ணை கட்சியில் இருந்தும் நீக்கி இருக்கிறார்கள்.‘

பாலியல் வன்கொடுமை செய்திகளை கேட்கும் போதெல்லாம் நெஞ்சம் கலங்குகிறது பதறுகிறது என்று 2 நாட்கள் முன்பு முதலமைச்சர் பேசினார்.

ஆனால், தன் கட்சியைச் சேர்ந்த த.வெ.க. ஆட்களே பாலியல் வன்கொடுமை செய்தால், பாதிக்கப்பட்ட பெண் மீது நடவடிக்கை எடுக்கிறார்.

Reels எடுத்து Post செய்ய தான் ‘சிங்கப்பெண்’ பிரிவை முதலமைச்சர் உருவாக்கினாரா?

**முதலமைச்சரே பதில் என்ன?**

இந்த கேள்விகளுக்கு முதலமைச்சர் என்ன பதில் வைத்திருக்கிறார்?

ஸ்ரீவைகுண்டத்தில் பாதிக்கப்பட்டப் பெண்ணிற்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட எம்.எல்.ஏ. சரவணன் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

அவருக்கு ஆதரவாக இருந்த ஆளுங்கட்சி மேலிட புள்ளிகள் யாரென்று விசாரித்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### கரூரில் விஜய் பிரச்சாரத்தின்போது, 41 பேர் உயிரிழந்த துயர சம்பவம் :

## சி.பி.ஐ. விசாரணை மீண்டும் தொடங்கியது!

கரூர், ஜீன் 13–

கரூரில் விஜய் பிரச்சாரத்தின் போது, 41 பேர் உயிரிழந்த துயர சம்பவம் தொடர்பான விசாரணையை சி.பி.ஐ. மீண்டும் தொடங்கியுள்ளது.

கரூரில், கடந்த ஆண்டு செப்டம்பர் 27ம் தேதி விஜய் பிரச்சாரத்தின்போது, கூட்ட நெரிசலில் சிக்கி பச்சிளம் குழந்தைகள், பெண்கள் உட்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்த கொடுந்துயரம் தொடர்பாக, உச்சநீதிமன்ற உத்தரவுப்படி சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கரூரில் உள்ள சுற்றுலா மாளிகையில், தற்காலிக சி.பி.ஐ. அலுவலகம் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த விசாரணையில், வேலுச்சாமிபுரம் பகுதி பொதுமக்கள், தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், உடற்கூறு ஆய்வு செய்த மருத்துவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், காவல்துறையினர், தவெக நிர்வாகிகள் என பல்வேறு தரப்பினரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அதனைத்தொடர்ந்து, சட்டமன்றத் பொதுத் தேர்தல் நடைபெற்றதால், விசாரணை ஏதும் நடைபெற வில்லை.

இந்நிலையில், கரூர் கொடுந்துயரம் தொடர்பான விசாரணையை சி.பி.ஐ. மீண்டும் தொடங்கியுள்ளது. கரூர் கொடுந்துயரம் நிகழ்ந்தபோது, பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் ஆய்வாளர் உள்ளிட்ட 10 காவலர்களுக்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பியுள்ளது. காவல் ஆய்வாளர் சையது அலி மற்றும் ஒரு சில காவலர்கள் மட்டும் நேற்று முன்தினம் விசாரணைக்காக ஆஜராகி உள்ளனர். கரூர் கொடுந்துயரில் 41 பேர் பலியானதற்கு காரணமான விஜயிடம் சிபிஐ ஏற்கனவே சம்மன் அனுப்பி டெல்லியில் வைத்து விசாரணை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

### த.வெ.க. ஆட்சியின் லட்சணம் பாரீர்! சி.எம்.டி.ஏ.வில்

# 3 நாளில் 130 பைல்களுக்கு அனுமதி!

## அமைச்சரின் உத்தரவின் பேரில் பல கோடி ரூபாய் லஞ்சம்?

சென்னை, ஜீன் 13-

**சி.எம்.டி.ஏ.வில் 3 நாளில் 130 பைல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல கோடி ரூபாய் மாமூல் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.**

இதுகுறித்து ‘தினகரன்’ நாளேட்டில் நேற்று முன்தினம் (11.6.2026) வெளியான செய்தி வருமாறு:-

சென்னை மாநகர எல்லைக்குள் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், ஓட்டல்கள் கட்ட வேண்டும் என்றால் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் என்று அழைக்கப்படும் சி.எம்.டி.ஏ.வில் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து அனுமதி பெற வேண்டும். சிறிய வீடுகளுக்கு மட்டும் சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெற்றால் போதுமானது.

சென்னையில் கடந்த சில ஆண்டுகளாக அதிக அளவில் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு சி.எம்.டி.ஏ.வில் அனுமதி பெற வேண்டும். தேர்தல் நேரத்தில் ஏராளமான கட்டிடங்களுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த விண்ணப்பங்களை அதிகாரிகள் அப்படியே வைத்திருந்தனர். பெரிய கட்டிடங்களைப் பொறுத்தவரை அமைச்சரின் அனுமதி தேவைப்படும் என்பதால், பைல்கள் அனைத்தும் அப்படியே இருந்தன.

கடந்த மே மாதம் 10ம் தேதி புதிய அரசு அமைந்தது. அப்போது விஜயுடன் சேர்த்து 10 பேர் பதவி ஏற்றனர். ஆனால் அவர்களுக்கு இலாகா ஒதுக்கப்படவில்லை. சில நாட்கள் கழித்துத் தான் அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்கப்பட்டது. அதன்பின்னர் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டு துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்த இடைப்பட்ட காலத்தில் சி.எம்.டி.ஏ.வில் உள்ள பைல்கள் அனைத்திற்கும் அனுமதி கொடுக்க வேண்டாம்.

அப்படியே வைத்திருங்கள் என்று சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலராக இருந்த பிரகாஷிடம், தவெகவில் முதல்வருக்கு அடுத்த நிலையில், தற்போதைய அரசை நிர்வகிப்பதாக கூறப்படும் ஒரு அமைச்சர் போன் செய்து கூறியுள்ளார்.

**அமைச்சர் உத்தரவு!**

ஆனால் சி.எம்.டி.ஏ.வில் உள்ள ஒரு உயர் அதிகாரி, திடீரென ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில் சி.எம்.டி.ஏ.வில் உள்ள பைல்கள் அனைத்தையும் உடனடியாக அனுமதி அளிக்கும்படி உத்தரவுகள் பறந்தன.

இதனால் கீழ் மட்டத்தில் இருந்த அனைத்து பைல்களும் உயர் அதிகாரிகளின் டேபிளுக்கு கொண்டு செல்லப்பட்டன. அதன்படி 3 நாளில் 130 பைல்களுக்கு சிஎம்டிஏவில் உள்ள ஒரு உயர் அதிகாரி அனுமதி கொடுத்துள்ளார். ஒவ்வொரு பைலுக்கும் சதுர அடி கணக்கீடு செய்து, அமைச்சர் மற்றும் அதிகாரிக்கு என்று ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்க வேண்டும் என்று ஒரு உயர் அதிகாரி லஞ்சம் வாங்கி குவித்துள்ளதாக கூறப்படுகிறது.

**உயர்மட்ட விசாரணை!**

இந்த 3 நாளில் மட்டும் 100 கோடி ரூபாய்க்கு மேல் பணம் வசூலித்துள்ளார். அதில் ஆழ்வார்பேட்டையில் ஒரு ஓட்டல் இடிக்கப்பட்டு வர்த்தக கட்டிடங்கள் பெரிய அளவில் கட்ட அனுமதி கேட்கப்பட்டுள்ளது. விதிமுறைகளை மீறி கட்டிடம் கட்ட அனுமதி கேட்டுள்ளதால், கடந்த ஆட்சியின்போது அனுமதி அளிக்கப்படாமல் இருந்தது. அந்த பைலுக்கு மட்டும் ரூ.30 சி வாங்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிறுவனம்தான், சென்னை கோயம்பேட்டில் ஒன்றரை ஏக்கர் கோயில் நிலத்தை மடக்கி அடுக்குமாடி குடியிருப்பை கட்டியிருந்தது. இந்த இடத்திற்கு பதிலாக புதிய இடத்தை அந்த நிறுவனம் வாங்கிக் கொடுத்து விட்டு, கோயம்பேடு இடத்தை அரசிடம் இருந்து வாங்கியுள்ளதற்கும் இவர் அனுமதி கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதற்காகவும் பெரிய அளவில் பணம் கைமாறியுள்ளது.

இவ்வாறு 3 நாளில் 130 பைல்களுக்கு அனுமதி அளித்து சுமார் ரூ.100 கோடிக்கு மேல் வருமானம் பார்த்துள்ளதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தற்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் 3 நாளில் 130 பைல்களுக்கு அனுமதி அளித்தது குறித்து உயர்மட்ட விசாரணையும் தொடங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

## பல லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பாதிப்பு!

### நீர்வளத்துறை அறிவிப்பால் டெல்டா விவசாயிகள் அதிர்ச்சி!

*மேட்டூர், ஜூன் 13-*

*டெல்டா மாவட்ட பாசனத்திற்காக திறக்கப்படும் மேட்டூர் அணை ஜூன் 12 அன்று திறக்கப்படாது என நீர்வளத்துறை அறிவித்துள்ளது. இதனால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.*

*ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி குறுவைசாகுபடிக்காக மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். கடந்த தி.மு.க. ஆட்சியில் ஜூன்12ம் தேதிக்கு முன்னதாகவே மேட்டூர் அணை திறக்கப்பட்டு வந்தது. இதனால் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடைந்து, சாகுபடியை அதிகரித்தனர். இந்நிலையில் தற்போது புதியதாகப் பொறுப்பேற்றுள்ள த.வெ.க.அரசு மேட்டூர் அணை ஜூன் 12 அன்று திறக்கப்படாது என அறிவித்துள்ளது.*

*நீர்வளத்துறையின் இந்த அறிவிப்பால் விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். தண்ணீர் திறக்காவிடில் குறுவை சாகுபடி முற்றிலும் பாதிக்கப்படும் என்றும், டெல்டா மாவட்டங்களில் பல லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் தரிசாகும் அபாயம் ஏற்படும் என்று அவர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர். ஏக்கர் ஒன்றிற்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தும், நெற்பயிர்கள் கருகி வருவதாகவும் விவசாயிகள் கண்ணீர் மல்க தெரிவிக்கின்றனர்.*

*மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்படாத நிலையில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு காரணமாக மோட்டார் பழுதடைவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். த.வெ.க. ஆட்சியில் விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை என்றும், குறைந்த மின் அழுத்த மின்விநியோகம் காரணமாக பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டு பயிர்கள் கருகி வருவதாகவும் விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.*